**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 407/2024**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 05.08.2025.**

| | |
|---|---|
| **Name : Santhi** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தோரமங்கலத்தில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் காலை நேரத்தில் நான் என் சொந்த வேலையாக வெளியே சென்ற சமயம் ராஜாத்தி என்பவரை யாரோ அடித்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) கடந்த 04.01.2024ம் தேதி காலை 7 மணிக்கு நான் என் வீட்டு முன்பாக இருந்த போது ராஜாத்தி தண்ணீர் தொட்டியை டிராக்டர் விட்டு இடித்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. ரஞ்சிதா என்பவர் ராஜாத்தியை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசினாரா என்றால் எனக்கு தெரியாது. பிறகு எதிரி உருட்டு கட்டையால் அ.சா.1 தலை மீது இடது கால், கை ஆகிய பகுதிகளில் அடித்தார்

என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.